அரியலூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் த.மா.கா. கட்சியைச் சேர்ந்தவர்கள் அக் கட்சியில் இருந்து விலகி தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர், அரியலூர் மாவட்டக் கழகச் செயலாளர் சா.சி.சிவசங்கர் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக்கொண்டனர். அவர்களுக்கு கழக இருவண்ண ஆடை அணிவித்து அனைவரையும் வரவேற்றார். உடன் அரியலூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் லதாபாலு, மாவட்ட தலைவர் பனங்கூர் ஜெயராமன், மாவட்ட துணைச் செயலாளர் சி.சந்திரசேகரன், ஒன்றியக் கழக பொறுப்பாளர்கள் இரா.கென்னடி, ரெ.அசோகசக்ரவர்தி, ஏ,ஜி.எஸ்.முருகன் மற்றும் மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

சேலம் மேற்கு மாவட்டம் – மேட்டூர், எடப்பாடி – சங்ககிரி சட்டமன்றத் தொகுதிகளில்

கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுக - செயல்வீரர்கள் கூட்டம்!

மாவட்ட கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!

சேலம், ஏப்.1-

சேலம் மேற்கு மாவட்டம் - மேட்டூர், எடப்பாடி மற்றும் சங்ககிரி சட்டமன்ற தொகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் செயல்வீரர்கள் கூட்டம் இன்று (01.04.2026-புதன்கிழமை) சேலம் மேற்கு மாவட்ட கழக செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி தலைமையில் சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர், சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், சேலம் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி ஆகியோரின் சிறப்புரையில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் மாவட்ட தலைவர்கள், செயலாளர்கள் முன்னிலையில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்கள் சங்ககிரி தொகுதி - மு.மணிகண்டன், எடப்பாடி தொகுதி -சி.காசி, மேட்டூர் தொகுதி -ம.மிதுன்சக்கரவர்த்தி ஆகியோரை ஆதரித்து கீழ் கண்ட நிகழ்ச்சி நிரல்களின் படி செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற உள்ளது.

தொகுதி - நேரம் - இடம்

87. சங்ககிரி - காலை 9.00 மணி - வாசுதேவ் மஹால், பவானி மெயின் ரோடு, சங்ககிரி

86.எடப்பாடி - காலை 11.00 மணி - ஸ்ரீ நடராஜன் மஹால், நைனாம்பட்டி, எடப்பாடி

85. மேட்டூர் - மாலை 3.00 மணி - திருமலை மாதவி மஹால், நவப் பட்டி, மேட்டூர்.

எனவே, தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இன்னாள் - முன்னாள் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக, வார்டு கழக செயலாளர்கள் - நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், இன்னாள் - முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், பாகநிலை முகவர்கள் (பிஎல்ஏ -2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (பிஎல்சி), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (பிடிஏ), கழக உடன்பிறப்புகள் மற்றும் இந்திய தேசிய காங்கிரஸ், தே.மு.தி.க, விடுதலை சிறுத்தைகள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், ம.தி.மு.க, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, திராவிடர் கழகம், எஸ்டிபிஐ, மனிதநேய ஜனாநயகக் கட்சி, கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி, மக்கள் நீதி மய்யம், தமிழ் நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி, திராவிட இயக்க தமிழர் பேரவை, ஆதி தமிழர் பேரவை, முக்குலத்தோர் புலிப்படை, கொங்கு இளைஞர் பேரவை உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் செயல்வீரர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் டி.எம்.செல்வகணபதி அறிவித்துள்ளார்.

கழக அரசின் ஐந்தாண்டு கால சாதனைகளைப் பட்டிதொட்டி, இல்லம் தோறும் எங்கும் பிரச்சாரம் மேற்கொண்டு

மகளிர் அணி சார்பில் 'திராவிட மாடல்' ஆட்சி அமைய அயராது உழைப்போம்!

கழக மகளிரணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் – மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிக்கை!

சென்னை, ஏப். 1 -

தமிழ் நாட்டில் ஒவ்வொரு பெண்களையும் "வெல்லும் தமிழ் பெண்கள்" ஆக மாற்றிய திராவிட மாடல் அரசு மீண்டும் அமைய மகளிர் அணி,மகளிர் தொண்டரணி, மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர், கழக நிர்வாகிகள் மற்றும் பாகந்தோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட 'ஸ்டாலினின் மகளிர் படை' இல்லம் தோறும் சென்று தேர்தல் பிரச்சாரம் செய்து'திராவிட மாடல் 2.0 'ஆட்சி அமைய அயராது உழைப்போம் என மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன். மகளிர், தொண்டரணி செயலாளர் நாமக்கல் ப.இராணி ஆகியோர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அவர்களது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதி நமது முதல்வர் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஓய்வின்றி உழைத்து வருகிறார் குறிப்பாக இந்திய அளவிலான பொருளாதார வளர்ச்சி குறியீட்டில் 16 சதவீதம் இந்த நாட்டின் முதன்மை மாநிலமாக உயர்ந்து நிற்கிறது.

தமிழ்நாட்டுப் பெண்கள் காவல் அதிகாரிகளாக, (Women IPS) கொண்டுள்ளதில் தமிழ்நாடு முதலிடம். வறுமை ஒழிப்பில் முதலிடம். இந்திய அரசியல் வரலாற்றில் மகத்தான திட்டமான குடும்ப தலைவிகளுக்கு மாதம் தோறும் ரூபாய் 1000 வழங்கும் மகளிர் உரிமை தொகை திட்டம். மாதந்தோறும் 1. 31 கோடி மகளிர் பெறுவதோடு அவர்களின் சமூக பொருளாதார நிலையும் உயர்ந்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பேருந்துகளில் பெண்கள் கட்டணமின்றி பயணிக்கும் விடியல் பயணத்திட்டம். தமிழ்நாடு மகளிர் ஸ்டாலின் பஸ் என பேரன்போடு அழைக்கப்படுகிறது. இதன் மூலம் ஒரு பெண் மாதந்தோறும் 800 முதல் 1100 ரூபாய் வரை சேமிப்பதுடன் அவர்கள் சுதந்திர உணர்வும் அதிகரித்துள்ளதாக ஆய்வு கட்டுரைகள் தெரிவிக்கின்றன. அரசு வேலைவாய்ப்பில் பெண்களுக்கு 40 சதவீதம் ஒதுக்கீடு. நகர்ப்புற வேலை வாய்ப்பு திட்டத்தில் பெண்களுக்கு 50 சதவீதம் வேலை வாய்ப்பு. மகளிர்க்கு ஊதியத்துடன் கூடிய பேறு கால விடுப்பு பணி 12 மாதங்களாக உயர்வு.

இந்தியாவில் தொழில்துறையில் ஈடுபட்டுள்ள மொத்த பெண் தொழிலாளர்களில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 43 சதவீதம் ஆகும். காலையில் பசியோடு பள்ளிக்கு வரும் மாணவர்களை பட்டினியாக வைத்து பாடம் சொல்லித் தரக்கூடாது அவர்களுக்கு சத்தான உணவு வழங்க வேண்டும் என்ற மகத்தான எண்ணத்துடன் தமிழ்நாடு முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்ட மகத்தான திட்டமே காலை உணவு திட்டம், புதுமைப் பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், தமிழ் மாணவன் திட்டம், மக்களை தேடி மருத்துவம், உங்களுடன் ஸ்டாலின், மருத்துவத்துறை, கல்வித் துறை, இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத் துறை, சமூக நீதியும் சமத்துவமும் என நமது முதலமைச்சர் அனைவருக்கும் சமம் என கிடைக்கப்பெற்று வேற்றுமைகளை கலைந்து அனைவரின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு அனைத்து மக்களும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும்.அமைதி பூங்கான தமிழ்நாட்டில் மதவாத சக்திகளுக்கு இடமில்லை என்ற உறுதியுடன் நம் மாநிலத்தின் உரிமைகளை டெல்லிக்கு அடகு வைக்க துடிக்கும் அடிமைகளின் எண்ணத்தை மக்களிடம் எடுத்துரைப்போம்.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு பெண்களையும் வெல்லும் தமிழ்ப் பெண்களாக மாற்றிய 'திராவிட மாடல்' அரசு மீண்டும் அமைய மகளிர் அணி, மகளிர் தொண்டரணி மாநில, மாவட்ட, ஒன்றிய,பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் பாகந்தோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட, 'ஸ்டாலினின் மகளிர் படை' ஆகியோர் திராவிட மாடல் அரசின் ஐந்தாண்டு கால சாதனைகளை பட்டி தொட்டி, இல்லம் தோறும் எங்கும் பிரச்சாரம் மேற்கொண்டு மகளிர் அணி சார்பில் 'திராவிட மாடல் 2.0 'ஆட்சி அமைய அயராது உழைப்போம். "ஸ்டாலின் தொடரட்டும்" "தமிழ்நாடு வெல்லட்டும்".

இவ்வாறு கழக மகளிரணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், கழக மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

திரைக் கலைஞர் பிரகாஷ் ராஜ்

தாயார் திருமதி சுவர்ணலதா மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஏப் 1–

திரைக் கலைஞர் பிரகாஷ் ராஜ் அவர்களின் தாயார் திருமதி சுவர்ணலதா அவர்கள் நேற்று முன்தினம் மறைவுற்றார் என்ற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:–

சமூகத்தின் மீது ஆழ்ந்த பற்றுகொண்ட திரைக்கலைஞர் பிரகாஷ் ராஜ் அவர்களின் அன்புத்தாயார் திருமதி. சுவர்ணலதா அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருத்தமடைந்தேன்.

அன்னையின் இழப்பு யாராலும் ஈடுசெய்ய இயலாதது. எவரையும் அசைத்துப் பார்க்கக் கூடியது. இந்தத் துயர்மிகு வேளையில் சகோதரர் பிரகாஷ் ராஜ் அவர்களுக்கு எனது ஆறுதலைத் தெரிவித்து, அவரது கரம்பற்றிக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மன்னார்குடி தொகுதி கழக வேட்பாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா முன்னிலையில் நீடாமங்கலம் ஒன்றியம் காருவாகுறிச்சி ஊராட்சியைச் சேர்ந்த அ.ம.மு.க.வினர் தங்களை கழகத்தில் இணைத்துக்கொண்டனர். உடன் ஒன்றியச் செயலாளர் நா.கவியரசு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் இருந்தனர்.

பிரம்மாண்ட தேர்தல் பிரச்சாரக் கூட்டம்

கரூர் - ராயனூரில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

மாவட்டக் கழகக் கூட்டத்தில் – மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி வேண்டுகோள்!

கரூர், ஏப். 1-

கழக வேட்பாளர்களை ஆதரித்து இன்று கரூர் ராயனூரில் பிரம்மாண்ட பொதுக் கூட்டம் நடைபெற உள்ளது. கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுச்சி உரையாற்றுகிறார்கள். கூட்டத்தில் திரளாக பங்கேற்பது என மாவட்ட செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கரூர் மாவட்டச் செயற்குழு கூட்டம் கரூர் மாவட்டக் கழக அலுவலகம், (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கத்தில் மாவட்ட அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி சிறப்புரையாற்றினார்.

கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் கே.சி. பழனிச்சாமி, நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என். மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், வர்த்தக அணி துணைச் செயலாளர் வே. பல்லவிராஜா, தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி.விஜயக்குமார்,

குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி, கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர், கரூர் மேற்கு பகுதிச் செயலாளர் தாரணி பி.சரவணன், மாவட்ட துணைச் செயலாளர்கள், எம்.எஸ்.கே.கருணாநிதி, பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பொருளாளர் பி.வி.

பரத், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சுப.ராஜகோபால், காலனி செந்தில், ஜி. பாலகுருபரன், எம்.துரைராஜ், கே.சுப்பிர மணி, பொதுக்குழு உறுப்பினர்கள் என்.எஸ்.ஆறுமுகம், கே.வேலுச்சாமி, வி.கே.டி.ராஜ்கண்ணு, பி.பி.சரவணன், சி.கருப்பையா (எ) தர்மர், கே.சாமிநாதன், ஈ.ஜாபருல்லா, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், ச.சிவகாமி சண்முகம், எம்.சிவசாமி, எஸ்.காளியப்பன், என்.ராமலிங்கம், பி.சிவகாமசுந்தரி, கலாவதி சக்திவேல், பி.ஏ.குமார், கரூர் மாநகர செயலாளர் எஸ்.பி. கனகராஜ், பகுதி கழக செயலாளர்கள் க.சுப்பிரமணியன், ஆர்.எஸ்.ராஜா, ஆர்.ஜோதிபாக, வி.ஜி.எஸ்.குமார், எம். பாண்டியன்,

ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.எஸ்.மணியன், என். மணிகண்டன், கே.கருணாநிதி, த.கார்த்திக், சி.வளர்மதி, வி.கே.வேலுச்சாமி, ப.முத்துக்குமார், எம்.ரகுநாதன், கே.பாஸ்கரன், கே.ரவிராஜா, எம்.ராமலிங்கம், கே.வீராசாமி (எ) சுதாகர், என்.செல்வராஜ், சி.கதிரவன், எல்.கரிகாலன், குளித்தலை அ.சந்திரன், ப. தியாகராஜன், இ.ராமர் முன்னாள் எம்.எல்.ஏ., ஜி.அண்ணாதுரை, பள்ளப்பட்டி நகர கழக பொறுப்பாளர் அ.வாசிம் ராஜா, புகழூர் நகர கழக செயலாளர் ஏ.குணசேகரன், பேரூர் கழக செயலாளர்கள் க.முரளி ராஜா, கா.அம்மையப்பன், சி.தங்கராஜ், எம்.சசிக்குமார், ஆர்.மோகன்ராஜ், இ.ரவீந்திரன், எம்.முத்து (எ) சுப்பிரமணி முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

வருகின்ற 2026 சட்டமன்ற பொதுத்தேர்தலில் கோவை தெற்கு சட்டமன்ற தொகுதியில் போட்டியிட கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி அவர்களுக்கு வாய்ப்பு வழங்கிய கழகத் தலைவர், திராவிட நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு இக்கூட்டத்தின் வாயிலாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

கரூர் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளராக ஆசி எம். தியாகராஜன், அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளராக பி.ஆர். இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளராக சி.கே. ராஜா, குளித்தலை சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளராக சூரியனூர் அ.சந்திரன் அவர்களையும் அறிவித்து உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட வாய்ப்பு வழங்கிய கழகத் தலைவர், திராவிட நாயகர் முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு இக்கூட்டத்தின் வாயிலாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

கழகத்தின் தலைவர், திராவிட மாடல் அரசின் திட்டங்களைக் செயல்படுத்தி, தன்னிகரில்லா தலைவராக எல்லோருக்கும் எல்லாம் என்ற நிலையை உருவாக்கியும், கரூர் மாவட்டத்திற்கு ரூ.5000 கோடி வளர்ச்சி திட்டங்களை வழங்கிய கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு கோடான கோடி நன்றியினையும், கரூர் மாவட்ட த்தில் உள்ள கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளில் உள்ள மக்கள் உறுதுணையாக இருப்பதை உறுதி செய்திடும் வகையில் 2026 சட்டமன்ற பொதுத்தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் பெருவாரியான வாக்குகளை பெற்று மகத்தான வெற்றியை தளபதி அவர்களின் பொற்கரங்களிலும், கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பொற்கரங்களிலும் வழங்கிட வேண்டுமென இக்கூட்டத்தில் தீர்மானிக்க படுகிறது.

இன்று (1.04.2026) மாலை 5.00 மணிக்கு கரூர் ராயனூர், தளபதி திடலில், திராவிட மாடலென, திக்கெட்டு திசையும் வியக்க ஆட்சிபுரியும், சமூகநீதி, சமத்துவம், சகோதரத்துவம், சுயமரியாதை காத்திடும் மாபெரும் மக்கள் பேரியக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், திராவிட நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள், கரூர் மாவட்டத்தில் உள்ள கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை ஆகிய நான்கு சட்டமன்றத் தொகுதிகளிலும் உதயசூரியன் சின்னத்தில் கழக வேட்பாளர்களை ஆதரித்து நடைபெறும் மாபெரும் பொதுக்கூட்டத்தில் எழுச்சியுரையாற்ற உள்ளார்கள்.

இப்பொதுக்கூட்டத்தில் கரூர் மாவட்டக் கழகம், மாநகர, பகுதி, நகரம், ஒன்றிய, பேரூர், வட்ட, வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட, மாநகர, பகுதி, நகரம், ஒன்றிய, பேரூர், வட்ட, வார்டு, கிளைக் கழகங்களின் சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கரூர் மாவட்டத்தில் உள்ள 1111 வாக்குச்சாவடிகளில் இருந்து BLA2, BLC, BDA, வெல்லும் தமிழ் பெண்கள், இளைஞர் படையினர் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் திரளாக கலந்துகொள்வது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தொடர் சரிவில் இந்திய ரூபாய் - ஒன்றிய அரசின் அலட்சியத்தால் சாமானிய மக்கள் பாதிப்பு!

ஈரோடு கே.இ.பிரகாஷ் எம்.பி. குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஏப்.1-

நாடாளுமன்றத்தில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் எழுப்பிய கேள்விக்கு, ஒன்றிய நிதித்துறை இணை அமைச்சர் அளித்துள்ள பதில்கள் அதிர்ச்சியளிப்பதாகவும், நாட்டின் பொருளாதாரச் சூழலை ஒன்றிய அரசு மூடி மறைக்க முயற்சிப்பதையும் காட்டுவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து கே.இ.பிரகாஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

1. வரலாறு காணாத வீழ்ச்சியில் ரூபாய் மதிப்பு:

அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 93.88 என்ற மிக மோசமான நிலையை எட்டியுள்ளது. கடந்த ஓராண்டில் மட்டும் ரூபாய் மதிப்பு 9% சரிந்துள்ளதை ஒன்றிய அரசே ஒப்புக் கொண்டுள்ளது. ஆனால், இந்த வீழ்ச்சியால் இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்து, பணவீக்கம் அதிகரித்து சாமானிய மக்கள் பாதிக்கப்படுவதை ஒன்றிய அரசு கண்டுகொள்ளவில்லை.

2. கச்சா எண்ணெய் விலையேற்றமும் சுமை அதிகரிப்பும்:

ரூபாய் மதிப்பு வீழ்ச்சியடைந்து வரும் சூழலில், உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்தால் அது இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலையை வரலாறு காணாத அளவிற்கு உயர்த்தும். இது போக்குவரத்துச் செலவை அதிகரித்து, ஏழைமற்றும் நடுத்தர மக்களின் அன்றாட உணவுப் பொருட்களின் விலையை விண்ணைத் தொடச் செய்யும். இதற்குப் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க ஒன்றிய அரசு தவறிவிட்டது.

3. வெற்று அறிக்கைகளால் தீர்வு கிடைக்காது:

நிதியமைச்சகத்தின் பதில் வெறும் புள்ளிவிவரக் கணக்காக மட்டுமே உள்ளது. பிப்ரவரி 2026ல் கொண்டுவரப்பட்ட புதிய விதிமுறைகளும், அண்டை நாடுகளுடன் மேற்கொள்ளப்படும் ரூபாய் வர்த்தகமும் இன்னும் முழுமையான பலனைத் தரவில்லை. ரூபாய் மதிப்பை நிலைநிறுத்த ரிசர்வ் வங்கி தலையிடுவதாகக் கூறினாலும், களயதார்த்தத்தில் இந்திய நாணயம் அதன் வலிமையை இழந்து கொண்டே வருகிறது.

எனவே, இந்திய ரூபாயின் மதிப்பை நிலைநிறுத்த வும், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவும் ஒன்றிய அரசு உடனடி மற்றும் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சாமானிய மக்களின் வாழ்வாதாரத்தை வெறும் "பொருளாதாரக் கணக்கீடாக" மட்டும் பார்க்காமல், அவர்களின் வாங்கும் சக்தியைப் பாதுகாக்கும் வகையில் கொள்கைகளை வகுக்க வேண்டும் எனத் கே.இ. பிரகாஷ் வலியுறுத்தியுள்ளார்.

கரூர் சட்டமன்றத் தொகுதியின் கழக வெற்றி வேட்பாளர் ஆசி. எம்.தியாகராஜனுக்கு, வெற்றிச் சின்னமாம் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க, கரூர் சட்டமன்றத் தொகுதி, மேற்கு பகுதி, கோடங்கிப்பட்டி பட்டாளம்மன் கோவில் பகுதி மக்களிடம் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி வாக்கு சேகரித்து உரையாற்றினார்.